கூட்டுறவுத் துறையின் சார்பில்

# 26 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சென்னை, பிப்.4-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், நேற்று முன்தினம் (2.2.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் 26 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் ஆணைகளை வழங்கினார்.

கூட்டுறவுத் துறையில் பல்வேறு பதவிகளில் பணிபுரிந்து இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படை யில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தகுதி பெற்ற 26 நபர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளின் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். அடிப்படையில் 26 நபர்களுக்கு வழங்கப்படுகிறது. இப்பணியிடம் தொகுதி 4-இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட பணியிடங்களாகும். இப்பணியிடத்திற்கான சம்பள விகிதம் நிலை-8 (ரூ.19,500-71,900) ஆகும்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுற வுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசும் போது தெரிவித்ததாவது :

கூட்டுறவுத்துறையில் கடந்த காலங்களில் பணியாற்றி வந்த குடும்பங்களைச் சார்தோர் பணியில் இருந்த காலகட்டங்களில் அவர்கள் இயற்கை எய்தியிருந்தால் அந்த குடும்பத்திற்கான இழப்புகள், குடும்பத்தலைவர்களை இழந்த நிலையில் பொருளாதார நெருக்கடியில் சிக்க நேரிடும் என்ற அடிப்படையில் தான் அரசின் சார்பில் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி ஆணைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கூட்டுறவுத்துறையில் கடந்த காலங்களில் பணிக்காலங்களில் இயற்கை எய்தியவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு பணியினை வழங்குவது என முடிவெடுத்து அதன் அடிப்படையில் இன்றைய தினம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆலோசனையின்படி, இன்னும் சொல்லப்போனால் இந்த பணி ஆணையை கூட அவர்களுடைய தலைமையில், அவர்களுடைய கரங்களால் வழங்கப்பட இருந்தது. ஆனால், வெளிநாட்டுப் பயணம், நிதி நிலைக் கூட்டம், சட்டமன்ற தொடர் கூட்டம் தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வரலாம் என்ற சூழ்நிலையில் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் அந்தந்த துறைகளில் இருக்கக்கூடிய பணிகளை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில், இன்று இந்த 26 குடும்பங் களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு பணி நியமன ஆணை வழங்கப்படுகிறது.

இன்று பணி ஆணைகளைப் பெறுகின்ற வாரிதாரர்கள், தங்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எப்படி இந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக தங்களை அர்ப்பணித்து பாடுபட்டார்களோ, அதைப் போல நீங்களும் இந்தத் துறையின் வளர்ச்சிக்கும், அதே நேரத்தில் உங்களுடைய குடும்பத்தின் வளர்ச்சிக்கும் நல்லவர்களாக இருந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நல்லநேரத்தில் உங்களை எல்லாம் அன்போடு வாழ்த்தி, உங்களுக்கெல்லாம் பணி நியமன ஆணைகளை வழங்க வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், கூட்டுற வுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என். சுப்பையன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட “நிர்வாகிகள் சந்திப்பு” கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, “அண்ணா அறிவாலயத்தில்” நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சோ.கி. மூர்த்தி

**பிப்ரவரி 4 (2002)**



**கழகம் தொடங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, சென்னை, வடபழனி – கோடம்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தைத் தொடங்கியபோது, சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றினார்.**

**1953 முதல் கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று 18 முறை சிறை சென்றவர்.**

**பொதுக்குழு உறுப்பினராக, தலைமைக் கழக அலுவலக செயலாளராக பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி நிலைக்குழுத் தலைவராகவும், சென்னை நகர வளர்ச்சி மேம்பாட்டுக்குழுத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார்.**

**இவரது தொண்டினைப் பாராட்டி தலைவர் கலைஞர் அவர்கள் தனது உடன்பிறப்புக்கான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

அரசுப் பேருந்துகளில்

## தானியங்கி கதவுகள் பொருத்திட நடவடிக்கை

சென்னை, பிப்.4-

சென்னையில் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் மாணவர்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும் என, மாநகர போக்குவரத்துக்கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து மாநகர போக்குவரத்துக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேருந்துகளை பாதுகாப்பாக இயக்கிட ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு நிலையான இயக்க முறைமை வாயிலாக அறிவுரை வழங்கபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் படியில் தொங்கி கொண்டு பயணம் செய்து விபத்து ஏற்படுவதை தவிர்த்திட அனைத்துப் பேருந்துகளிலும் தானியங்கி கதவுகள் பொருத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

மாணவர்கள் படிகளின் அருகே உள்ள ஜன்னல் கம்பியை பிடித்து தொங்கி கொண்டு பயணம் செய்வதை தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஆபத்தான முறையில் படிக்கட்டில் தொங்கியபடி பயணம் செய்தால் அவர்களுக்கு தக்க அறிவுரை மற்றும் எச்சரிக்கை செய்ய வேண்டும் என்றும், பேருந்தை சாலை ஓரம் நிறுத்தி மாணவர்கள் பேருந்தின் உள்ளே வந்த பிறகு பேருந்தை இயக்க வேண்டும் என்றும், மாநகர போக்குவரத்துக்கழகம் அறிவுறுத்தியுள்ளது.





மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை நெல்பேட்டையில் உள்ள அன்னாரது திருஉருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி முன்னாள் அமைச்சர் உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு மற்றும் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம் உடன் கழக நிர்வாகிகள் மா.ஜெயராம், தனச்செல்வம், மா. ஒச்சு பாலு, வட்ட செயலாளர் நெல்பேட்டை பிஸ்மி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு விருதுநகரில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு பேரிடர் மற்றும் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர். எஸ்.ஆர். மாதவன், நகர் கழகச் செயலாளர் எஸ்.ஆர். தனபாலன், செயற்குழு உறுப்பினர் சுப்பாராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் பேரறிஞர் அண்ணாவின் 55வது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளரும்,கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ, ஒன்றியச் செயலாளர் எஸ்.சண்முகவடிவேலு,பேரூர்க் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன், பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல்லில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி மாவட்டக் கழகத்தின் சார்பில் அமைச்சர் அர.சக்கரபாணி, மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, காந்திராஜன் எம்.எல்.ஏ, மாவட்டத் துணைச் செயலாளர்கள் நாகராஜன், மார்க்ரேட் மேரி, மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன் வெள்ளிமலை, திண்டுக்கல் ஒன்றியப் பெருந்தலைவர் ராஜா உட்பட நிர்வாகிகள், திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணியாக சென்று அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன். உடன் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உடன் கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.